மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S. 114 /2022

வாக்குமூலம்: வா.சா.1 – செல்லமுத்து
21.11.2025:

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** : நான் எந்த சர்வே நம்பரில் தடம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.487/3D, 506/4C மற்றொரு சர்வே எண் ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.–3 ல் மேற்படி சர்வே எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்குப் பாதைக்கு மேற்குப் பகுதி உயிர்வேலி அமைந்துள்ளது என்றால் சரிதான். உயிர்வேலி அமைத்து சுமார் எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் எனது சிறுவயதிலிருந்தே உயிர்வேலி அமைந்துள்ளது அந்த பாதை வழியாகத்தான் நாங்கள் சென்று வருவோம். எனது கூட்டுப்பங்காளி கண்டிமுத்து என்பவர் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கண்டிமுத்து நிலத்தில் உயிர்வேலி உள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிர்வேலி 2 ஆம் பிரதிவாதியால் அமைக்கப்பட்டுள்ளது. ஆணையர் வந்த பார்வையிட்ட சமயம் உயிர்வேலி இருந்தது என்றால் சரிதான். கண்டிமுத்து நிலத்தை தாண்டி தான் எனது நிலத்திற்கு செல்ல முடியும் என்றால் சரிதான். என்னுடைய நிலத்திற்கு தெற்கு பக்கம் தொப்பம்பட்டியிருந்து சரவணபட்டி செல்லும் சாலை அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த பாதையிலிருந்து வடக்குமுகமாக எனது நிலத்திற்கு செல்ல முடியுமா என்றால் இல்லை. தற்போது வரை மேற்படி பாதையில் தான் எனது நிலத்திற்கு சென்று வருகிறேன் என்றால் மேற்படி பாதையை நடந்து செல்வதற்கு பயன்படுத்தி வருகிறேன் ஆனால்

வண்டிப்பாதை இல்லை. ஆணையர் மேற்படி பாதையை பார்வையிட்டு வண்டிப்பாதை என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் மேற்படி பாதை வண்டிப்பாதை இல்லை. ஆணையர் அறிக்கை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். ஆணையர் அறிக்கையில் நான் பாதை கோரி பகுதியில் முள் செடி முளைத்திருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் முள்செடி உள்ளது ஆனால் எங்களை இந்த பாதையில் பயன்படுத்த விடாமல் தடுத்த பிறகு தான் முள்செடி முளைத்துள்ளது. எந்த காலத்திலும் நாங்கள் மேற்படி பாதையை பயன்படுத்தியதில்லை என்றாலும் மேற்படி பாதையை உயிர்வேலி அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி பாதையைத் தான் பயன்படுத்தி வருகிறோம். அந்த பாதையின் வழியாக தான் பின்புறம் தோட்டத்திற்கும் சென்று வருவார்கள். மேற்படி பாதையை யார் யார் பயன்படுத்தி வருகிறார் என்று எனது நிரூபணவாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்து எனது தகப்பனார் சொத்து என்றால் சரிதான். வழக்குச் சொத்து வா.சா.ஆ.1ன் மூலம் எனக்கு பாத்தியப்படுத்தியுள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்தை என் தந்தை எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த பிறகு தான் என் பெயரில் பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1ல் வழக்குப் பாதையை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்குப் பாதையில் பாதை இல்லை அதனால் தான் வா.சா.ஆ.1ல் வழக்குப் பாதையைப் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தை என் தகப்பனாரும், ஆவுடையப்பகவுண்டரும் பாகப்பிரிவினை செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி பாகப் பிரிவினை ஆவணத்தில் வழக்குப் பாதையை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கோரும்

பாதை நிலவியலில் இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த மாதிரி வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

3 முதல் 5 பிரதிவாதிகள் மீது இவ்வழக்கில் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 4 ஆம் பிரதிவாதியிடம் நான் மனு செய்துள்ளேன். மனு சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சனையின் காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 3, 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2025.11.07 15:44:16 +0530

District Munsif,
Palani.